# இணைப்பு படிவம்–1

## இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி

## (Calender of Events)

### மாவட்டத்தின் பெயர்: கடலூர்

| வ.எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு/அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website& Email Id |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் மாவட்டம். இத்திருக்கோயிலின் தலவிருட்சம், பாதிரிமரமாகும். பாதிரிமரங்கள் அடர்ந்த வனத்தில் அம்மன் தவம் இயற்றி இறைவனை திருமணம் செய்தது. புலிக்கால் முனிவர், வியாக்ரபாதர் பூஜித்த தலம், அப்பர், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் முதலியோர் பாடியுள்ள ஸ்தலம். கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. | வைகாசி மாதம் | 31.05.2017 | வைகாசிப்பெருவிழா கொடியேற்றம் | 04142 – 236728 | www.padaleswarartemple.org<br>Padaleswarartemple@gmail.com |
| | | | 04.06.2017 | தெருவடைச்சான் உற்சவம் | | |
| | | | 05.06.2017 | வெள்ளிரதம் | | |
| | | | 06.06.2017 | திருகல்யாண உற்சவம் | | |
| | | | 08.06.2017 | திருத்தேரோட்டம் | | |
| | | | 9.06.2017 | முத்து பல்லக்கு | | |
| | | | 10.06.2017 | திருஞானசம்பந்தர் ஞானபால் உண்ட ஐதீக உற்சவம் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | அருள்மிகு தில்லைக்காளியம்மன் திருக்கோயில், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம். இத்திருக்கோயில் சுமார் 725 ஆண்டுகளுக்கு முன் கோப்பெருஞ்சிங்கன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்டுள்ளது. சிவம் பெரியதா, சக்தி பெரியதா என்ற விவாதம் கையிலயங்கிரியில் சிவனுக்கும் சக்திக்கும் இடையே ஏற்பட்டது. சிவமும் சக்தியும் ஒன்றே என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தவும், பார்வதி தேவியின் கர்வத்தை அடக்கவும் சிவபெருமான் பார்வதிதேவியை, காளியாக மாறுமாறு சபித்து விடுகிறார். காளியான பார்வதி தேவியார் சிதம்பரம் தில்லைவனத்தில் வந்து தங்கிவிடுகிறார். இவ்வாறாக தீயவைகளை அழிக்கும் கோப சக்தியாக தில்லைகாளியும் நல்லவைகளை அருளும் சாந்த சொரூபிணியாக தில்லையம்மனும் ஆக இருவடிவமாக இத்திருக்கோயில் இருந்து அருளாட்சி புரிகிறார். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையில் ராகு கால பூஜையில் இக்காளியை வழிபட்டால் நாகதோஷம் நீங்கி திருமணத்தடை அகலும் என்பது ஐதீகம். | வைகாசி மாதம் | 16.05.2017<br>20.05.2017<br>24.05.2017<br>26.05.2017 | காப்பு கட்டுதல்<br>தெருவடைச்சான்<br>திருத்தேர்<br>முத்து பல்லக்கு | 04144–230251 | www.thillaikaliamman@gm[illegible]com |
| 3. | அருள்மிகு வீரட்டானேஸ்வரர்சுவாமி திருக்கோயில், திருவதிகை, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். இத்திருக்கோயில் அப்பர், சுந்தரர், சம்மந்தர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற திருக்கோயில் ஆகும். திருநாவுக்கரசர் மற்றும் திலகவதியார் ஆகியோரின் அவதாரத்தலம் அட்ட வீரட்ட தலங்களில் 3–வது தலமாக விளங்குகிறது. சிவபெருமான் முப்புராதிகளை தகனம் செய்த வீரத்தலம். வயிறு, மார்பு தொடர்பான நோய்களை போக்கும் பிரார்த்தனை தலமாக விளங்குகிறது. இத்திருக்கோயில் கி.பி.7–ம் நூற்றாண்டைச் சார்ந்தது. தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்ற அமைப்பை உடையது. ஆனால் காலத்தால் தஞ்சை பெரிய கோயிலை விட முற்பட்டது. பல்லவர் கால கலை அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. | வைகாசி மாதம் | 29.05.2017<br>02.06.2017<br>06.06.2017 | கொடியேற்றம்<br>வெள்ளி ரிஷப வாகனப் புறப்பாடு<br>காலை திருத்தேர் புறப்பாடு<br>மாலை திரிபுரசம்ஹாரம் | அலுவலகம் 04142–243555<br>செயல் அலுவலர் 9443441292 | www.veerataneswarar@gmail.com |